**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 237 | of | 2019 |
|---|---|---|---|---|

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **நெல்சன் சாமுவேல்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-24.10.2025**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் வழக்குரையை படித்துப் பார்த்தேன் அதில் 1ம் பிரதிவாதியின் சகோதரிஎன் முறையில் 3ம் பிரதிவாதி அனைத்து பரிவர்த்தனைகளிலும் ஈடுபட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. 2019ல் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. 2024ல் தாக்கல் செய்யப்பட்ட பிரமான பத்திரத்திலும் இது சொல்லப்படவில்லை. நான் 3ம் பிரதிவாதிக்கு ரூ.5 லட்சம் காசோலை மூலம் கொடுத்தேன். எந்த ஆண்டு காசோலை கொடுத்தேன் என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை. 2019ல் தாக்கல் செய்த வழக்குரையிலும் இந்த விவரத்தை சொல்லவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் யார்

யாருக்கு security deposit ஆக ரூ.5 லட்சம் கொடுத்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. 2019 ம்ஆண்டு வழக்குரையிலும் இதுசொல்லப்படவில்லை. 3 ம்பிரதிவாதிக்கு மட்டும்தான் ரூ.5 லட்சம் கொடுத்தாக பிரமான வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் சொல்லப்பட்டுள்ளது. அந்த ரூ.5 லட்சத்தை square developers கம்பெனி பெயரில் கொடுத்தேன். அந்த காசோலையை 3 ம்பிரதிவாதி வங்கியில் செலுத்தி தொகை பெற்றுவிற்றார். அதை காட்ட வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்திருக்கிறேன். ஆனால் அது குறியீடு செய்யப்படவில்லை. 06.09.2016 ல் Four square developers நிறுவனத்திற்கு 3 ம் பிரதிவாதி ரூ.5 லட்சம் காசோலை மூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது பள்ளிக்கரணை சொத்திற்காக அவர் செலுத்திய தொகையாகும். அந்த ரூ.5 லட்சம்தான் 3 ம்பிரதிவாதிக்கு 05.10.2016 ல் திருப்பி செலுத்தினோம் என்றால் பள்ளிகரணை சொத்து வில்லங்கம் உள்ளது என்று நினைத்தால் திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி 06.09.2016 வங்கி பரிவர்த்தனையை காட்டக் கூடிய வங்கி கணக்கு பட்டியல் பி.வா.சா.ஆ.14 ஆகும். 3 ம்பிரதிவாதி கொடுத்த அந்ததொகையைதான் டெபாசிட் தொகை என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1,2 பிரதிவாதிகளுக்கும் இடையில்தான் தாவா சொத்தை பொறுத்து தொடர்பு உள்ளது என்றும், அதில் 3 ம்பிரதிவாதிக்கு தொடா்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் அறிவிப்பில் ரூ.5 லட்சம் தொகை செலுத்தப்பட்டதை தொடர்ந்து

26.08.2013 தேதியிட்ட பவர் ஆப் அட்டார்னி ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் தொகை காட்டப்படமாட்டாது. வா.சா.ஆ.4 ல் 1,2 பிரதிவாதிகள் டெபாசிட் தொகை எந்த வகையில் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். டெபாசிட் தொகை 1,2 பிரதிவாதிகளுக்கு எந்த வகையில் கொடுக்கப்பட்டது என்று வழக்குரையிலும் , முதல்விசாரணையிலும், அறிவிப்பிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். டெபாசிட் தொகை 1 முதல் 3 பிரதிவாதிகளில் யார் கொடுத்தார்கள் என்று அறிவிப்பில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் blank cheque கொடுத்தோம். 3 பிரதிவாதிகளில் ஒருவர் பெயரை எழுதிக் கொள்ளச் சொன்னோம். வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் 1,2 பிரதிவாதிகள் ஆவார்கள். ஆனால் 3 ம்பிரதிவாதி அமெரிக்காவில் இருந்து அவர்தான் 1,2 பிரதிவாதிகளுக்கு பின்புலமாக இருந்து செயல்படுகிறார். இந்த விவரத்தை வழக்குரையிலோ என் முதல் விசாரணையிலோ சொல்லவில்லை.

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாணை ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu